ஞாயிறு வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூபா 5
தனிப் பிரதி 0—1—3

இலங்கை 10 சதம்
மலாய் நாடு 8 காசு

REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 27—10—46 | இதழ் 26

# பம்பாய் பணகுண்டு

வேடிக்கைப்படம் அல்ல—நிலைமையைப் படமாக்கிக்காட்டப்பட்டிருக்கிறது விளக்கத்துக்காக. அதோ குன்றென உயர்ந்துள்ளவன், கையில் பணகுண்டு வைத்துக்கொண்டு நிற்கிறான்—கீழேகையில் கோலும், தலையில் முண்டாசும் கொண்டுள்ள உருவம், தெரிகிறதல்லவா, அது சென்னை! பணகுண்டுடைய உருவம், பம்பாய்! சின்ன உருவுக்கும் பெரிய உருவுக்கும் இடையே உள்ள மகத்தான பேதம் நம்மை மருட்டுகிறதல்லவா? அவ்வளவு பெரிய உருவினிடம், சிறிய உருவம், என்ன செய்ய முடியும்? ஏவல்வேலை தவிர! இது வெறும் கற்பனையுமல்ல — ஆதாரமற்றதுமல்ல — புள்ளி விவரந்தான் படவடிவில்.

பெரியஉருவம் —சின்ன உருவைப்போல, பத்து மடங்கு பெரிது.

சின்ன உருவம் சென்னை, பெரிய உருவம் பம்பாய், நாடு முழுதுங்கூட அல்ல!

சென்னை என்றால், சென்னை மட்டுமல்ல; சென்னை, கொச்சி, திருவாங்கூர், மைசூர் சேர்ந்து.

ஏன், சென்னையின் அளவுபோல பம்பாயை 10-மடங்கு பெரிதாக அளவிடவேண்டும்? என்று கேட்கிறீர்களா,

சென்னை, பம்பாய், ஆகிய இருமாகாணங்களின், மில் துணி உற்பத்தியின் அளவைக் காட்டவே இந்தப்படம்.

சென்னை, கொச்சி, திருவாங்கூர், மைசூர் உட்பட, ஆண்டுக்கு 30-கோடி சதுரகெஜம் துணி மில்லில் தயாராகிறது.

பம்பாயில், ஆண்டுதோறும் 330-கோடி சதுரகெஜம் துணி தயாரிக்கப்படுகிறது மில்லில். சென்னை உற்பத்தியைவிட 10 மடங்கு அதிகம்.

இதைத்தான் படமாக்கினோம் —சென்னை எந்த அளவுள்ள மனிதவடிவில் காட்டப்படுகிறதோ அதைவிட 10-மடங்கு அதிகமான அளவுள்ளதாக பம்பாயை மனிதஉருவாகப் பொறித்திருக்கிறோம்.

1-க்குபதினொன்று30 இங்கே! 330அங்கே! ஆனால் இங்குமக்குள்ள முதலமைச்சர், "மூடு மில்லை!" என்கிறார்; அங்குள்ள அமைச்சர்கள் "ஓடு சீமைக்கு" என்று உத்தரவிட்டு, நிபுணர்களை அனுப்புகிறார்கள், புதிய புதியமில் யந்திரங்கள் வாங்கிவர. பணகுண்டு, தயாரிக்காமல் எப்படிப்பம்பாயால் இருக்க முடியும். நம்மைப்போல1க்கு11 ஆக ஓங்கி வளர்ந்திருக்கும் போது, இன்னும் வளர்ந்து கொண்டே போகும்போது,பம்பாய்; சென்னையைச் சட்டை செய்யுமென்று எதிர்பார்க்க முடியுமா? சேட்ஜிக்குஇங்குள்ளவர்களைக்கண்டால், படத்தில் உள்ளதுபோல, சிறு உருவமாகத்தானே தோன்றும். ஆலையில் தயாரிக்கப்படும், துணி சம்பந்தமாக மட்டிலுமே, சென்னைக்கும் பம்பாய்க்கும், 1-11 என்ற முறை. பொதுவாகஉள்ளமற்ற விஞ்ஞான ரசாயன யந்திர சாதனத் தொழில் வளர்ச்சி,





வியாபார வளர்ச்சி, பணபல வளர்ச்சி ஆகியவற்றைக் கவனித்துக் கணக்கிட்டால் சென்னை போலப் பம்பாய், 11 மடங்கல்ல பலப்பல மடங்கு அதிகமுள்ள வடிவமெடுக்கும். இந்நிலைமைத் தான், பொருளாதார ஏகாதிபத்யம், புதியவல்லரசு, பொன்விலங்கு, பணஅரசு, பிர்லாஸ்தான் என்று பலகூறி இதுவரை விளக்கி வந்தோம். சீமைக்கும் இந்தியாவுக்கும் இதுபோல் நிலைமை இருந்ததைக் கூறித்தான், சுயராஜ்யப்போர் துவக்கப்பட்டது. இன்று பம்பாய் சீமையாகிவிட்டது. சென்னை, குப்பமாகிவருகிறது. அந்த வீழ்ச்சியைத் துரிதப்படுத்த முதலமைச்சர் முனைந்திருக்கிறார். தறிமீது ஆணையிட்டு, காந்தியார்மீது பாரத்தைப் போட்டுவிட்டு, சென்னை மாகாணப் பொருளாதாரத்தின் மீது கல்லைப்போடுகிறார். வர்த்தக சங்கம் தடுக்கிறது—பத்திரிகைகள் கண்டிக்கின்றன—பொருளாதார நிபுணர்கள் கண்டிக்கின்றனர்—தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி கண்டிக்கிறது—கைத்தறி நெசவாளர் சங்கம் கண்டிக்கிறது—எங்கும் கண்டனம், ஆனால் பிரகாசம்காரு வேலெடுத்தகாரியத்தை முடித்தே தீருவேன் என்கிறார்.

"ஐயா! உம்முடைய நோக்கம்கூட நல்லதாகஇருக்கக்கூடும், ஆனால் எமது பேச்சைக்கேளுங்கள், இதன் விளைவு கேடாகத்தான் இருக்கும்" என்று இதமாகக்கூடப்பலர் சொல்கிறார்கள். அவர்கள் யாவரும் முதலமைச்சரின் தேசியத் திருவிழிகளுக்கு, சர்க்காரின் எதிரிகளாகத் தெரிகிறார்கள்.

"சென்னை சர்க்காரால் நிராகரிக்கப்படும் நூற்புக்கதிர்களைத் தனக்குக் கொடுத்து விடும்படி கொச்சி சர்க்கார் கேட்டதாக ஒரு செய்திபடித்தேன். சென்னை சர்க்காரின் கொள்கை மாறாவிடில், நாம் மான்செஸ்டருக்குப்பதிலாக நமது அக்கம் பக்கத்துக்காரர்களால் சுரண்டப்படுவோம்" என்று டாக்டர் சுப்பராயன்பேசியிருக்கிறார்.

சுரண்டப்படுவோம்! இதைக் கூறும் டாக்டர், . காந்தியார்

(அடுத்த பக்கம் பார்க்க)




## பம்பாய்

1-ம் பக்கத் தொடர்ச்சி

டம் பல முறை கதரைப்பற்றிப் பேசிப் பேசிப்பார்த்து விட்டுப் பிறகு கூறும் கருத்துஇது. பல நூறு மேடைகளிலே, திராவிடர் கழகத்தார் கூறினர், இது போல முன்பு.

"சுதந்திரா" பத்திரிகையின் ஆசிரியர், காசா. சுப்பாருவ், காங்கிரசார், பார்ப்பனர், அறிஞர், அவர் கூறுகிறார் கதர் நிலைத்திருக்கவே முடியாது என்று.

"நான்திருப்பதியிலும் சித்தூர் ஜில்லாவில் வேறுசில இடங்களிலும், கையினால் நூற்கும் திட்டத்துக்குக் கழகம் அமைத்து, வேலை செய்து, அந்தத்திட்டத்தைப் பரப்பமுயற்சித்தேன்; ஆரம்பத்தில் வெற்றி கிடைத்தது. ஆனால் அந்த ஆர்வம்படிப்படியாக மங்கிமடிந்துவிட்டது. நான் எதிர்நீச்சு நடத்தினேன், அது இயற்கையாகவே வெற்றி பெற முடியாமற் போய் விட்டது. இப்போது முன்பு இருந்ததைவிட மோசமானநிலையில் இருக்கிறோம். மத்யசர்க்கார், யந்திர சாதனங்கள் கொண்ட தொழிற்சாலைகளை அமைக்கும் திட்டத்திலேயே 'மோசு' கொண்டிருக்கிறார்கள். அவர்களில்யாரும், காந்திபக்தியிலே, பிரகாசம் அவர்களுக்குக்குறைந்தவரல்ல — அவர்களும் காந்தி சீடர்களே. இப்படி மக்களிடம் இருவிதமான முரண்பட்ட கருத்துப்பரப்பப்படுகிறது. இதன் விளைவு என்னவாகும், என்பது பற்றிக்கூறத்தேவையில்லை" என்று மற்றோர் காங்கிரஸ்காரர் சித்தூர் K. ராஜகோபாலாச்சாரி என்பவர் கூறுகிறார்.

"தர்மசங்கடமாகஇருக்கிறதே நிலைமை" என்று கூறித்தத்தளிக்கிறது 'கல்கி.' இவ்வளவுக்கும் அசைந்து கொடுக்கமறுக்கிறார் முதலமைச்சர்.

இப்போதுள்ள நிலையிலேயேசென்னைக்கும் பம்பாய்க்கும், உள்ளபேதம், பீதிகொள்ள வேண்டிய அளவு இருக்கிறது, இனி, மேற்கொண்டு இங்குமில் கிடையாது— கதிர்களையும் அதிகப்படுத்த முடியாது என்றுமுதலமைச்சர்கூறுகிறார். இதேசமயத்திலே, நெசவாலைக்கான புதிய மெஷின்கள் வாங்க ஒரு கோடி பத்து கோடி அல்ல, 100கோடிரூபாய்க்குத் திட்டமிட்டிருக்கிறதுமத்யசர்க்கார். இங்கு ராட்டையும், அங்கு புதிய மில்களும்!

இப்போது அங்கு 330 கோடி சதுரகஜம் மில் துணி தயாராகிறது; புதிய திட்டத்தின்படி அது இன்னும் வளரும். சித்திரம் மேலும் கொஞ்சம் பெரிதாகும், அதுபோது, இங்கு இப்போது உற்பத்தியாகும் 33கோடிசதுரகெஜம் மில்துணி குறையும், உருவம் மேலும் சின்னதாகவேண்டும்!

எண்ணிப்பாருங்கள், ஏற்கனவே கேலிசெய்வதுபோலவும் கிலியூட்டுகிற முறையிலும் ஓங்கி வளர்ந்துள்ள பம்பாய் ஆலைத்தொழில் இன்னமும் வளர்ந்தால், என்ன ஆகும் என்பதை.

இன்று பம்பாய் மாகாணத்தில், மூன்றரைக்கோடி மக்கள் உள்ளனர். இங்கு, 60 இலட்

(7-ம் பக்கம் பார்க்க)

## ★ பாகப் பிரிவினை ★

(நக்கீரன்)

சம்பந்தர் தங்கியிருந்த மடத்துக்குச் சமணர்களால் இடப்பட்டதாகச் சொல்லப்படும் தீ, சம்பந்தரால் வெப்புநோயாக மாற்றப்பட்டுப் பாண்டியனை வருத்தும்படி ஏவப்பட்டதை அறிந்த மங்கையர்க்கரசியும், குலச்சிறையும் மன்னனை அணுகி "இந்நோய் சம்பந்தராலன்றி நீங்கா" தென்று சொன்னதாகவும், அதற்கு, அம்மன்னன், "திருஞானசம்பந்தரை அழைத்து வாருங்கள்; என்நோய் தீர்ப்பார் யாரோ, அவர் பக்கம் யான் சேர்வேன்" என்றுகூறியதாகவும், அதன்படி, சம்பந்தர் அழைத்து வரப்பட்டதாகவும், அவர் வருகையைக்கண்ட சமணர்கள் திகிலடைந்து, மன்னனை அணுகி, "நோயைத்தீர்க்கும் பொறுப்பை இருவருக்கும் வழங்குக; நோயை முற்றிலும் அவர் தீர்த்தாலும், நாங்கள் தீர்த்ததாகச் சொல்லுதல்வேண்டும்" என்றுவேண்டிக்கொண்டதாகவும் கூறப்படும் நிகழ்ச்சி சம்பந்தர் வரலாற்றில் காணப்படுகின்றது.

இந்நிகழ்ச்சியைச், சிறிதளவு அறிவுடையாரும்உண்மையென ஒப்புக்கொள்ள மாட்டார்கள். சம்பந்தராலன்றி இந்நோய் நீங்காதென்று மங்கையர்க்கரசியும் குலச்சிறையும் கூறியது, அவர்கள், சம்பந்தரிடத்திலும் சைவசமயக் கொள்கைகளிலும் கொண்ட பற்றுதல் காரணமாக, ஒருக்கால் உண்மையென வைத்துக் கொண்டாலும், சமணர்களால் கூறப்பட்டதாகச் சேக்கிழாரால் அமைக்கப்பட்ட சொற்றொடரை, அதாவது "நோயைச் சம்பந்தர் தீர்த்தாலும், நாங்கள் தீர்த்ததாகச் சொல்லுதல் வேண்டும்" என்பதை எவரும்—எந்தக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டும் உண்மையென் ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். ஒரு சமயத்தை, அதுவே உண்மைச் சமயம்எனநம்பி, அச்சமய வழிநிற்கும் சமயத்தலைவர்கள், தங்களால் பின்பற்றப்படும் சமயத்திலும், அச்சமயத்திற்குத் தலைவனை கடவுளிடத்திலும் நம்பிக்கையற்ற முறையில் நடந்து கொண்டார்கள் என்று கூறுவது எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும். ஒருக்கால், சமணசமயமும் அதன் தலைவனை அருகனும் போலியேயன்றி உண்மையல்ல வென்று வைத்துக்கொண்டாலும், அப்போலித் தன்மையை அச்சமயாசிரியர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்ற முறையில் கதையை அமைப்பது, கதை அமைப்பவரின் அறியாமையை அம்பலத்துக்குக் கொண்டுவருமேயன்றி, அதனால் பெறப்படும் உண்மை வேறு யாதும் இருக்க முடியாது. எந்த ஒரு சமயத்தைச் சார்ந்திருப்பவனும், தான் சார்ந்துள்ள சமயத்தை இழிவாகப் பிறர் கருதும்படியோ, அன்றித், தானே அந்தச்சமயத்தில் நம்பிக்கையை இழந்து அதனை இழிவாகப் பேசும் முறையிலேயோ ஒருபோதும் நடந்து கொள்ள மாட்டான். அதிலும், இங்கு கூறப்படும் வரலாற்றின்படி, இந்நிகழ்ச்சி ஒருபோதும் உண்மையாக இருந்திருக்கவே முடியாது. எப்படி யென்றால், இங்கு பேசப்படும் பாண்டியன், முதலில் சைவசமயத்தைச் சார்ந்திருந்தவனென்றும், பின்னர், சைவம் பொய்யென்றும் சமணமே மெய்என்றும்சமண சமயாசிரியர்களால் கூறப்பட்ட காரணங்களை ஒப்புக்கொண்டு, சைவத்தை விட்டுச் சமணத்தைச் சார்ந்தான் என்றும் கூறப்படுகின்றது. இந்த நிலையில், சமணர்கள், தங்கள் சமய உண்மைகளால் சைவத்தைப் பொய்யாக்கித் தங்கள் சமயத்தை மேற்கொள்ளும்படி செய்த ஒருவனிடம் சென்று, "நோயை முற்றிலும் சம்பந்தர் தீர்த்தாலும், நாங்கள் தீர்த்ததாகச்சொல்லுதல்வேண்டும்" என்று கூறியிருப்பார்களா என்பதனை நடுநிலையுடையோர் நன்காராய்ந்து பார்க்க வேண்டுகிறேன்.

இனி, உண்மையாகவே, சமணசமயம் பொய்என்பதும், சைவசமயமே மெய் என்பதும், சைவசமயக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு செய்யக்கூடிய காரியங்களைச், சமண சமயத்தால் செய்யமுடியாதென்பதும்சமணசமய ஆசிரியர்களால் உணரப்பட்ட உண்மையென்றால், சமணர்கள், தங்களால் உணரப்பட்ட உண்மைச் சமயமான சைவ சமயத்தை மேற்கொள்ளாமல், போலியாக அல்லது போலியான ஒரு சமயத்தை என் உண்டாக்கவேண்டும்? கனியிருக்கக்காய்கவர்வது போல, உண்மை இருக்க, அதனை மேற்கொள்ளாமல், பொய்யான ஒன்றை உண்டாக்குவதும் பின்னர், உண்டாக்கப்பட்ட அப்பொய்யை உண்மையென நிலைநாட்ட முயல்வதும் வேண்டப்படாத வேலையன்றோ! சைவத்திற்கு இருக்கும் ஆற்றல் சமணத்திற்கு இல்லைஎன்பது சமணர்களால் அறியப்பட்ட உண்மையென்றால், ஆற்றல் மிக்க சைவத்தைப் பின்பற்றாமல், புதிதாக அதிலும் ஆற்றலற்ற ஒரு சமயத்தை உண்டாக்குவதும், அதனை மக்கள் பின்பற்ற வேண்டுமென்பதற்காக அது குறித்துப் பல நூல்கள் எழுதுவதும், அங்ஙனம் செய்தவர்

(7-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 27—10—46 [ஞாயிறு

# எல்லை

★

எல்லைப்புறத்திலே சென்று, அங்குள்ள பல்வேறு மலை ஜாதியினரைக்கண்டு, அவர்களின் மனநிலையைக்கண்டறிந்துவிட்டு, பண்டித ஜவஹர், சுகமே திரும்பியது காண மகிழ்கிறோம். ஆபத்து நிறைந்த இடம், மர்மம் உள்ள இடம் என்பது தெரிந்தும், அங்கு சென்று, ஆங்காங்கு காட்டப்பட்ட எதிர்ப்புகளைக் கண்டு மனங்கலங்காது, பயணத்தைமுடித்துக்கொண்டுவந்த ஆண்மையையும் ஆற்றலையும் பாராட்டுகிறோம். நாட்டுப்பிரச்னையை அறியவும், நாட்டைய பிரச்னையை யூகிக்கவும், இந்தஎல்லைப் புறத்துப்பயணம், அவசியமானது. ஆபத்து நிறைந்த இடம் என்பதற்காக அங்கு போகாதிருப்பது, ஆட்சிப்பீடத்திலுள்ளவரின் முறையாக இருக்கலாகாது. எல்லையின் விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் என்பதை உணர்ந்தே பண்டித ஜவஹர், திடுக்கிடும் காட்சி நிறைந்த சுவினத்தில் படிப்பதுபோன்ற சம்பவங்கள் நிறைந்த சுற்றுப்பயணத்தைச் செய்து முடித்தார்—மகிழ்ச்சி—பாராட்டுதல் இரண்டும் இந்தச் செயலுக்கு.

எல்லைப்புறம்,ஒருபுதிர்நிறைந்த பிரச்னையாகவே இருந்து வந்திருக்கிறது-இன்றுங்கூடத்தான். அதிகாரிகளைக்கடத்திச் செல்வது, திடீர்த்தாக்குதல், குன்றுகளிலிருந்து சுடுவது என்ற முறையில் மலைஜாதியினர் வேலை செய்கின்றனர்-அவர்களை அடக்க ஏகாதிபத்யம் விமான மூலம் சென்று குண்டுவீச்சு செய்கிறது. அத்தகைய கொந்தளிப்புள்ள இடம் எல்லைப்புறம்.

ஒரு பக்கம் இந்தியாவுடன் ஒட்டிக்கொண்டும், மற்றோர் புறம் ஆப்கனிஸ்தானுடன் ஒட்டிக்கொண்டும் இருக்கும் இடம் இது. ராணுவ முக்யத்துவம் வாய்ந்த இந்த இடத்தின் மனநிலை, இந்தியாவின் எதிர்காலத்தைபாதிக்கக்கூடியது.எனவேதான், இந்த இடத்துக்குப் பண்டிதஜவஹர் சென்று வந்தது அவசியமான செயல் என்று கருதுகிறோம்.

பிரிட்டிஷ் ஆட்சி நீங்கி, எதிர்காலத்தைச் சித்தரிக்கும் பொறுப்பு நம்மவரிடமே தரப்படும் நிலைபிறந்தால்,எல்லைப்புறம் மட்டுமல்ல, எல்லைகள் என்று குறிப்பிடத்தக்க வேறுபல இடங்களின் போக்கையும் நிலையையும் நினைப்பையும், கூர்ந்துகவனித்தாகவேண்டும். காரியமாற்றக்கிளம்பும்போது ஏற்கனவே கொண்டிருந்த எத்தனையோ கருத்துக்களை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் நேரிட்டுவிடுகிறது, என்பதைப் பண்டித நேருவின் இன்றைய பேச்சிலிருந்து தெரிந்துகொள்ளலாம், அவரை வாரிசு என்று எந்தக்காந்தியார் கூறுகிறாரோ, அவர் அகிம்சையின் அவசியத்தைவற்புறுத்தியபோது, பண்டிதர், பக்கப்பாட்டுப் பாடிக்கொண்டுதான் இருந்தார். ஆனால் எல்லைப்புறத்தின் இயற்கை அமைப்பையும், அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறையையும் நேராகக் கண்டபிறகு, இந்தியப் படை முதல்தரமானதாகவேண்டும்—நவீன போர்க் கருவிகள் கொண்டதாக இருக்கவேண்டும் என்று பேசியிருக்கிறார்.

படைபலத்தின் அவசியத்தைப்பற்றிய பேச்சு, முன்பெலாம் தேசியவாதிகளின் வாயிலே வருவதில்லை. இன்று? நிலை, நினைப்பையும் மாற்றித்தானே தீரும். பண்டிதர் படை பலத்தைப்பற்றித்தெளிவுரை ஆற்றியதை வரவேற்கிறோம், ஆனால் இன்னும் ஒருபடி சென்று நிலைமையை மேலும் கொஞ்சம் கூர்ந்து பார்க்கவேண்டுகிறோம்.

எல்லைப்புறம், ஒருபக்கத்திலே அமைந்திருக்கிறது — மற்றோர் மூலையிலே மணிப்பூர் எல்லையாக அமைந்திருக்கிறது — அது போலவே,காஷ்மீர்ஒருபுறமாகவும், நேப்பாள், பூடான், திபெத் ஆகியவைகளும், இந்தியாவை, ஆசியாவுடன இணைக்கும் இடங்களாக உள்ளன. நேசநிலைமை இருக்கும்வரையில், இவைகள் இணைப்புகள்— போர்நிலை உண்டானால் இவைகள், ஆபத்தைக் கக்கும் இடங்கள் என்பதை மறக்கக்கூடாது!

இந்த எல்லைகளிலெல்லாம்எல்லைப்புறமாகாணமும் அதைஒட்டி ஆப்கன்வரை பரவியுள்ள இடமும், மிகமுக்கியமானது—ஏனெனில், மற்ற எல்லைகளில் இல்லாத ஒருநிலைமை இங்கு இருக்கிறது—அதாவது, இங்குள்ளவர்கள் இந்தியாவிலுள்ள முஸ்லீம்களுடன் மார்க்கத்துறையில் ஒன்றுபட்டவர்கள்—இங்கு முஸ்லீம்களுக்கு மனக்கொதிப்போ, அதிர்ப்தியோ ஏற்படுமானால், அது அவர்கள் உள்ளத்திலேயும் உணர்ச்சியைஊட்டுகிறது. அது மட்டுமின்றி, வெளிப்படையாகவே உணர வேண்டுகிறோம், புதைந்துள்ள உண்மையை— இந்த எல்லைக்காரர்கள் இந்தியர் என்ற பெயரைப்பெயரை விரும்பியவர்களுமல்ல; இந்துக்கள் என்பவர்களுடன் நேசம் கொண்டாடுபவர்களுமல்ல. இறந்தகால நிகழ்ச்சிகள் இதற்கு நேர்மாறாகவே இருந்தன. எனவே, எல்லைப்பிரச்னையைத்தீர்க்க, மற்ற இடங்களிலே உள்ளதுபோல, நவீன யந்திரசாதனப் படை அமைப்பதுமட்டும் இங்கு போதாது — இங்குள்ள பத்துக் கோடி முஸ்லீம்களுக்கு மனத்திருப்தி உண்டாகும்படி செய்வதுதான், படையைவிட அதிக முக்கியமானபலன்தரும். இதனை எல்லை சென்று வந்தபிறகு, பண்டிதர் நன்கு தெரிந்துகொண்டிருப்பார் என்று நம்புகிறோம்.

எல்லைப்புறத்திலே, பண்டிதருக்கு, எங்கும் காட்டப்படாத அளவுஎதிர்ப்பு காட்டப்பட்டது. அங்கு மலைஜாதியினர் காட்டிய போக்கை நாம் பலமாகக்கண்டிக்கிறோம்.நேசபாவத்துடனும், நேரடியாக நிலைமையைக் கண்டறியவும் வந்த ஒருதலைவருக்கு, கண்டனத்தைத் தெரிவிக்க, கல்வீசுவதும், குண்டு வீசுவதும், வழிமறிப்பதும், அநாகரிகச் செயல் — அரசியல் முறையல்ல.

இதற்குக்காரணம் என்ன? மலைஜாதியினர் கிளப்பிவிடப்பட்டனர், என்று கூறுகிறார் டாக்டர் கான்சாகிப்; ஜிர்காதாரர்களைப்பிரிட்டிஷ் அதிகாரிகள்ஏவிவிட்டிருக்கிறார்கள்—ஏராளமான பணம் செலவிட்டிருக்கிறார்கள், எனவேதான் அந்த மலைஜாதித் தலைவர்கள், வழிமறிக்கவும், குண்டு வீசவும் துணிந்தனர், என்று எல்லைப்புற முதலமைச்சரும், பண்டித ஜவஹரும் கூறினர்.

இது உண்மையெனின் இடைக்காலசர்க்கார், தூண்டிவிடும் துரைமார்களின் துடுக்குத்தனத்தை அம்பலப்படுத்தி,அந்த இலாக்காவையே கலைத்தாக வேண்டும். வெளிநாட்டு உறவு இலாக்கா பண்டித ஜவஹருடையது, எனவே அவரே, இக்காரியத்தைச் செய்ய முனைய வேண்டும்.

அதுமட்டும் போதாது—சிந்திக்கவேண்டும். மிக மிகஆழ்ந்த சிந்தனை வேண்டும்.

தூண்டிவிடுபவருக்குச் சுலபத்திலே, அந்த மலைஜாதியினர் வசமாகிவிடுவது உண்மையானால், இன்று துரைமார்களைக் கண்டித்துவிடுவது மட்டும் போதாது — பயனளிக்காது—நாளை—எதிர்காலத்தில்—வேறுஎவரேனும்—அன்னிய நாட்டினர் தூண்டிவிட்டால் அதற்கும் அந்த ஜிர்காதாரர்கள் ஆடுவது என்றநிலை இருந்தால், இந்தியாவின் எதிர்காலம், எப்படி இருக்கும், என்பதைஎண்ணிப்பார்க்க வேண்டும்.

உலகிலே, பல்வேறு இடங்களிலே, இத்தகைய எல்லைகளில் தொல்லையைத் தூண்டிவிடுவதை வல்லரசுகள் தமது தந்திர ஆயுதமாகக்கொண்டுள்ளன—இந்தியா மட்டும் இந்த நிலையிலிருந்து தப்ப முடியுமா? என்பதைச் சிந்தித்தாகவேண்டும்.

கைபர் கணவாய் வழியாக பண்டித ஜவஹர் வந்துகொண்டிருந்தபோது, அவர் கண்ட குன்றுகளும் வெடிப்புகளும், மலைகளும், சரிவுகளும், பேசியிருக்கமுடியாது, ஆனால் அவை ஒவ்வொன்றும், சரித்திர சம்பவங்களை அவர் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்தித்தான் இருக்கும்,

எனவே எல்லையில் தொல்லை இன்று இருப்பதற்குப் பிரிட்டிஷார்மீது குற்றம் சாட்டிவிடுவது, பிரச்னையின் முடிவல்ல— இத்தகைய எல்லை இருக்கிறது— இங்குள்ள மக்கள், மலைகளைக் கோட்டைகளாகவும், கணவாய்களைப்பாசறைகளாகவும், குகைகளைக் கொலுமண்டபமாகவும் கொண்டுள்ளனர்—அவர்கள் இங்குள்ள கோடிக்கணக்கான மக்களில், பத்துக்கோடி முஸ்லீம்களைமட்டுமே, மார்க்கத்திலே ஒன்று என்ற காரணத்துக்காக நேசிக்கமுடியும் — மற்றவர்களிடம் அவர்கட்குத் தொடர்பு ஏற்படமுடியாது — அப்படிப்பட்டவர்களிடம் எல்லை இருக்கிறது.

அந்தஆபத்துதரக்கூடியஇடத்திலே, இந்திய பூபாகத்தில் இந்துக்களே ஆள்கிறார்கள், இஸ்லாமியர்கள் அவர்கட்கு அடங்கி இருக்கவேண்டி இருக்கிறது என்று மனக்கொதிப்பு ஏற்பட்டால், தொல்லை, தொடர்கதையாகிவிடுமே—அதுநல்லதா, விரும்பத்தக்கதா, என்பதையோசிக்க வேண்டும்.

படை பலத்துடன், ராஜதந்திர பலமும் படைத்த பிரிட்டிஷாராலேயே, இந்த எல்லைப் பிரச்னை சம்பந்தமாக, சுலபத்திலேகாரியமாற்றமுடியவில்லை. பல வைசிராய்களின் புகழுக்கே, பங்கம் நேரிடக்கூடிய, சிக்கல்கள்எல்லையிலிருந்து கிளம்பின. எல்லைப்புறம் என்ற அளவோடு முடியவில்லை—ஆப்கன்நாடு வரையிலே, பிரிட்டிஷ் ஈட்டிமுனை பாய வேண்டி இருந்தது — அதுபோலவே ஆப்கன் அரசர்கள், காபூல்வரை அல்ல, டில்லிவரை தமது படைகளைச் செலுத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். அதுபோலவே, ரஷியாவுக்கும், பிரிட்டனுக்கும், ஆப்கனிஸ்தானில்யாருக்குச்செல்வாக்குஇருப்பது என்ற விஷயமாகச்சச்சரவுகள் ஏற்பட்டன. அவ்வளவு தொல்லைகள் இந்த எல்லையில் முளைத்தன. பிரிட்டிஷார்கூட, பலத்தைத் துணைகொண்டல்ல, பக்குவமாகத் தட்டிக்கொடுக்கும் முறையினாலேதான், எல்லைப்பிரச்னையைத் தீர்க்கமுடிந்தது—இனி அவர்களுக்கு இந்த எல்லைப்பிரச்னை தலைவலியாக இராது—தலைவலி நமக்குத்தான். எனவேதான், அதிர்ப்திப்பட்ட முஸ்லீம்கள் உள்நாட்டிலேயும், ஆத்திரங்கொண்ட முஸ்லீம்மலை

4-ம் பக்கம் பார்க்க.

ஒன்றுக்குழைத்திடல் யோகம்

## எல்லை

3-ம்பக்கத் தொடர்ச்சி

ஜாதியினர் எல்லையிலும், இருக்கும் நிலைமை, எதிர்காலத்துக்கு நல்லதல்ல—ஆபத்தைக்காட்டும் அறிகுறி அது என்று அஞ்சுகிறோம்.

கண்டிப்பதாகக் கருதிக் கொண்டு, பண்டிதர் உண்மையை வெளியிட்டுவிட்டார்—கருத்துடையோர் புரிந்துகொள்ளக்கூடிய விதத்திலே!—எல்லைப்புறத்து மக்கள் காட்டிய எதிர்ப்பு 1.பிரிட்டிஷ் சிருஷ்டி. 2. எல்லைப்புறத்திலே, லீகர்கள் பிரசாரம் செய்து, இந்த எதிர்ப்பைக்கிளப்பி விட்டனர்; என்று பண்டிதர் கூறினார். இதிலிருந்து என்ன தெரிகிறது?

1. எல்லைப்புறத்து மக்களைத் தூண்டிவிட முடியும்.

2. எல்லைப்புறத்து மக்கள், லீகின் பிரச்சாரத்தை ஒப்புக்கொண்டனர், என்றுதானே எற்படுகிறது.

இது, நல்லஅறிகுறியாஎன்று நாம் கேட்கிறோம்.

எல்லைப்புறத்திலே தான்,முஸ்லீம்லீக்கின் செல்வாக்கு மிகக் குறைவு என்பதைக் காங்கிரஸ் தலைவர்களே கூறிவந்தனர். சென்ற சட்டசபைத் தேர்தலில், முஸ்லீம் மாகாணமாகிய எல்லையில், முஸ்லீம்லீக் முறியடிக்கப்பட்டு விட்டது என்பதைப் பெருமையுடன் காங்கிரஸ் தலைவர்களே எடுத்துக் காட்டினர்.

இங்கு இருப்பதுபோல, எல்லையில் ஒருகாந்தியாரே இருக்கிறார் என்று கடந்த இருபதாண்டுகளாகக் கூறிவந்திருக்கிறார்கள்.

அந்த எல்லைக் காந்தியின் (குதாய்-கித்மத்கார்கள்-)செஞ்சட்டையினரின் வீரதீரபராக்கிரமத்தைப்பற்றிப் பேசிஇருக்கிறார்கள்.

எல்லைப்புறம், லீகை ஆதரிக்கவில்லை, பாகிஸ்தானை ஆதரிக்கவில்லை என்று பேசிவந்தார்கள்—நேற்றுவரை.

நாமும் பார்க்கிறோம், ஜனாப் ஜின்னா, மற்றமாகாணங்களுக்கு அடிக்கடி சென்று பிரசாரம செய்வது போல, எல்லை செல்லக்காணோம். இருந்தும், இன்று எல்லைப்புற மாகாணத்திலும், அதை ஒட்டிஉள்ள மலைப்பிரதேசத்திலும்,லீகின் பேச்சைக் கேட்டுக்கொண்டு, எதிர்ப்பு செய்கிறார்கள் — பட்டாளம் தேவைப்படும் அளவு எதிர்ப்பு—பாய்ந்து சென்றுபக்கத்திலுள்ளவரிடமிருந்து கைத்துப்பாக்கியைஎடுத்து, எல்லைக்காந்தியின் சகோதரர் எதிர்ப்பாளர்களைப் பயமுறுத்த வேண்டிய அளவு எதிர்ப்பு, அங்கே ஏற்பட்டது. எப்படி? செல்வாக்கற்ற லீக் என்று சொன்ன பேச்சுஎன்ன ஆயிற்று? எல்லைக்காந்தியின்சிறுவிரல் அசைந்தால் பட்டாணியரும் பிறமலைஜாதியினரும் பணிவர் என்று பிரசாரம் செய்தது என்னவாயிற்று! ஏன், வெற்றி பெற்று, அரசு அமைத்து, செஞ்சட்டைப்படை அமைத்து செல்வாக்குப் பெற்றுள்ள எல்லைக் காந்தியினால் மலைஜாதியினரின் மனதை மாற்ற முடியவில்லை? மலை வகுப்பினரின் மனதைமாற்றும் சக்திமுஸ்லீம் லீக்குக்குமட்டும் எப்படிக்கிடைத்தது?

இப்பிபக்கிரி ஆதரிக்கிறார், இன்னின்ன ஜிர்காக்களிலே ஆதரிக்கிறார்கள் என்றெல்லாம் கூறப்பட்டதே, அவையாவும் என்புகைந்து போயின? ஆழ்ந்து யோசிக்கவேண்டிய விஷயங்கள்—அவசரத் தீர்ப்பும் ஆத்திர முடிவும்,கூடாது.

மலைஜாதி மக்கள், பிரிட்டிஷ் ஆட்சியை விடாமல் எதிர்த்து வந்தவர்கள்—அவர்களின்காட்டு அரசில், பார்லிமெண்டரி முறையை எதிர்பார்க்க முடியாது—ஆனால், அவர்கள்பட்டை தீட்டப்படாத வைரம்போன்ற சுதந்திரத்தை விரும்பிவாழ்பவர்கள். அதனை அறிந்த பிரிட்டிஷார் மிகமிகப் பக்குவமாக நிலைமையைச் சமாளித்து வந்தனர்.

பிரிட்டிஷாரிடம், இயற்கையாகவே எல்லைமக்களுக்குக் கோபம், அவனுடையமொழி நாகரிகம் ஆகியவற்றை மேற்கொண்டுங்கூட, பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்திடம் நமக்குக் கோபம் ஏற்பட முடியும்போது, பிரிட்டிஷார் உண்டாக்கிய சூழ்நிலையில் இருக்க மறுத்து, நாமுண்டு நமது மலையுண்டு, அங்கு ஆபத்தான விளையாட்டுண்டு, ஆனந்தமான தனி வாழ்வுண்டு என்ற முறையிலே வாழ்ந்துவந்த மலைஜாதிமக்கள், எப்படி பிரிட்டிஷாரை நேசிக்கமுடியும். என் காலை அவன் மிதிக்காமலிருக்கும் வரை சரி,மிதித்தால் அவன் தலை என் காலில்! என்று முழக்கமிடுபவர்கள் அங்குள்ளமக்கள். எனவே, காங்கிரசின் ஆரம்பநாட்களில், பிரிட்டிஷ் எதிர்ப்புப்பிரசாரம் நடைபெற்றபோது, அவர்களுக்கு அது மதுரமாகஇருந்தது. முஸ்லீம்லீக், ஏகாதிபத்யத்தின் கையாள் என்று பிரசாரம் செய்யப்பட்டபோது, உரிமைக்காக உயிர்விடும் இயல்பினரான அம்மக்கள், லீகை வெறுத்தனர், எல்லைக்காந்தியை நேசித்தனர்.

இன்று நிலைமை மாறிவிட்டதை அவர்கள் அறிந்து கொண்டனர். வெள்ளைக்கார ஆட்சிஇனி இல்லை, சுயாட்சி இருக்கும் என்பதும், அந்தச் சுயாட்சியை ராமராஜ்யம் என்று அழைக்கிறார்கள் என்பதும், அந்த ராஜ்யத்திலே தங்களுக்குப் பிடித்தமில்லை, எனவே தனிராஜ்யம் கொடு என்று முஸ்லீம்கள் கேட்கிறார்கள் என்பதும், அதற்குக் காங்கிரஸ் விரோதமாக இருக்கிறது என்பதும், அந்தக் காங்கிரஸ், லீகும் இல்லாமல், இடைக்காலசர்க்கார் அமைக்க பிரிட்டிஷாருடன் திட்டமிட்டது என்பதும், அவர்களுக்குத் தெரிந்ததும், நிலைமை அடியோடு மாறிவிட்டது—அவர்கள் சரியாகக்கூடப்பார்த்திருக்க மாட்டார்கள் ஜனாப்ஜின்னாவை, அத்தகைய ஜின்னாவை நேசிக்க ஆரம்பித்துவிட்டனர். இது தான் சூட்சமமே யொழிய, கிளப்பி விட்டனர், கூலிகொடுத்தனர் என்பது பிரச்சாரமுறையே யொழிய உண்மையின் படப்பிடிப்பு அல்ல.

பாகிஸ்தான் என்றபெயர் கேட்டதும், ஆப்கனிஸ்தானுக்குப் பக்கத்திலே உலவும் மக்களுக்கு, 'ஆசை' ஏற்படாதிருக்க முடியுமா—விளக்கம்—திட்டம்—காரணம்கூட அவர்களுக்குத் தேவைஇல்லையே!

இங்குதான், நாம்கூற விரும்புகிறோம், உண்மை எவ்வளவு கசப்பாக இருந்தாலும், அதனை ஏற்றுக்கொண்டாகவேண்டும்.பண்டிதஜவஹர் மட்டுமல்ல, காங்கிரசே, இன்று எல்லை எதுவென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

பிரிட்டிஷார்மீது பொதுப்படையான எதிர்ப்பைக் காட்டமட்டுமே, இந்து, முஸ்லிம், பார்சி, சீக்கியர், திராவிடர், பழங்குடியினர், மலைவகுப்பினர், ஆதிகுடிகள், என்ற எந்தப் பாகுபாடும் இன்றி, எல்லோரையும், ஒன்று திரட்டமுடியும்.

ஏகாதிபத்ய எதிர்ப்பு ஒன்றுக்குத்தான், இப்படி அனைவரையும் ஒன்றாகத்திரட்டமுடியும்.

பொது ஆபத்து என்ற போது தான், எங்கும் இதுபோல, பேதம் கொண்ட மக்களுங்கூட, ஒரேபடையிலே சேரமுடியும்.

அந்த எதிர்ப்புணர்ச்சிக்கு அவசியமான நிலைமைஇல்லைஎன்றால்,அடுத்த விநாடியே, அவரவர்கள் தத்தமது உரிமை அந்தஸ்து ஆகியவற்றினையே முன்னணியாகக்கொண்டு வேலைசெய்வர். இதுவே, விடுதலை இயக்கத்திலே உள்ள எல்லைப்புறம்! இதைத் தாண்டுவது ஆபத்து—நண்பர்கள் விரோதிகளாவர்.

தீப்பிடித்து எரியும்போது, ஆளுக்கொரு பாண்டமெடுத்து, கிடைக்கும் தண்ணீரைமொண்டுஊற்றி அணைப்பர்—எனக்குக்குடம் கொடுத்தால் தான் தீ அணைப்பேன் — என்னிடம் வாளி தராவிட்டால் வரமுடியாது என்று யாரும் கூறமாட்டார்கள் — ஏனெனில் அனைவரின் கவனமும், தீயின் மீதுதான் இருக்கும். தீ அணைந்ததோ, தீர்ந்தது அந்த ஒற்றுமை—எங்கே என்குடம்? வாளி, வாங்கினாயே கொடு இப்படி! என்று அவரவர்கள் தத்தம் உடைமைகளைத்தேடவும், பாதுகாக்கவும் ஆரம்பிப்பர்.இது இயற்கை. அதுபோலவே, எல்லைமக்களும், எந்த ஜாதிமக்களும், ஏகாதிபத்யஒழிப்பு என்ற ஒரு வேலைக்கு மட்டுமே, யார், யாருடைய தலைமையின்கீழ் வேலை செய்வது, வேலை செய்வதால் யாருக்கு இலாபம்,என்ற கணக்கிலே கவலை கொள்ளாமல்,ஒன்றாக நின்று — (ஒன்றாக நின்றுதான் ஒருருவாகி அல்ல!) வேலைசெய்தனர். ஆனால், வேலை முடிந்தது என்ற உடனே, தத்தமது உரிமைகளைக்காப்பாற்றிக்கொள்ளத்தான் முனைவர். இந்த மனநிலைதான், விடுதலை இயக்கத்திலே, உள்ள எல்லை. இதனைத் தாண்டிச்செல்வது ஆபத்து நிறைந்தது—இதனை எல்லைபுறப்பயணத்தின்பலனாகப்பண்டித ஜவஹர் தெரிந்துகொண்டிருப்பார் என்று நம்புகிறோம்.

★


# நெசவுத் தொழில்

## பாதுகாப்பு

## மாநாடு

—:(o):—

**11—11—46-ல் சென்னை செயின்ட்மேரி மண்டபத்தில்**

தலைவர்:— திரு. எஸ். முத்தையா முதலியார்

திறப்பாளர்:— ஜனாப் அப்துல்மஜீத், எம். எல். ஏ.,

வரவேற்பாளர்:— திரு. ஏ. கே. தங்கவேலர்,


**பொது நலம் ஓங்கிடச் செய்வதே யாகம்**

## பம்பாய்

6-ம் பக்கத் தொடர்ச்சி

இருக்குமா? வாழ்க்கைத்தரத்திலே எவ்வளவுபேதம் ஏற்பட்டு விடும்—இதன் பயனாக, எதிர்காலம் எவ்வளவு இடருள்ளதாகும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம். இங்கே கைராட்டை-அங்கேமில்! இங்கே 14-ம் நெம்பர் நூல்—அதனாலான ஆடை—அங்கு 100ம் நெம்பர் நூல், அதனாலான ஆடைகள் விதவிதமாக! இங்கு வீட்டுக்கொரு ராட்டை—அங்கு ஆண்டுக்கொரு புதியமில்!

இவ்வளவு மில்களும், மில் நூலைக்கொண்டு தயாரிக்கப்படும் கைநெசவுத்துணியும், கையினாலேயே நூற்றுக்கையினாலேயே நெய்து தயாராகும் கதரும் சேர்ந்தே, சென்னைக்குத்தேவையான அளவு ஆடை கிடைக்கவில்லை என்று அவதிப்படுகிறோம். இனி நாளாவட்டத்திலே, ஆலைகளே இராது என்ற நிலையில், கதரைக்கொண்டு, சென்னைக்குத் தேவையான அளவு துணி முழுதும் தயாரிக்கமுடியுமா? எந்த நிபுணரும் இது ஆகாத காரியம் என்பதைக் கூறுகின்றனர். தோழர் T.R. வெங்கடராமசாஸ்திரியார், காங்கிரசுக்கு விரோதியல்ல, அவர் கூறுகிறார், கதர்கலைக்கு உதவாத திட்டம் என்ற. கட்டாயக் கதர்த்திட்டம் என்று துவக்கினாலே, கதருக்குள்ள மகிமை போய்விடும் என்று 'இந்து' இதழ் எழுதுகிறது.

கதர் மூலமாகவோ, போதுமான அளவு ஆடை தயாரிக்க முடியாது; மற்ற மாகாணங்களிலேயோ மில் தொழில் ஓங்கி வளர்ந்தபடி இருக்கும்; அந்த மாகாணங்களுடன், குறிப்பாகப் பம்பாயுடன் இணைக்கப்பட்ட நிலையிலேயே சென்னை இருக்குமாம், ஆகவே, அந்தச்சரக்குகள் இங்கே குவியும்; அதன் மூலமாகப்பணம் இங்கிருந்து அங்கு போகும்—இதனைத்தான் ஏகாதிபத்யம் இதுவரைசெய்துவந்தது —இன்று அதன்கிளைஸ்தாபனம் பம்பாயில் இருக்கிறது—சென்னைச்சிறையிலிருந்துவேலூர் சிறைக்கு மாற்றப்படும் கைதிபோலச், சென்னை, பரங்கி ஏகாதிபத்யத்தின் பிடியிலிருந்து விடுபட்டு, பனியாஏகாதிபத்யத்தின் பிடியில்சிக்குகிறது—இதற்காக, சிதம்பரம்பிள்ளையின் வாழ்வு சிதைந்தது—குமரனின் ஆவி பிரிந்தது—காசிராஜனும் ராஜகோபாலனும் தூக்குமேடை அருகே சென்று திரும்பினர், பல்லாயிரக்கணக்கில் வாலிபர்கள் தியாகத்தீயில் குளித்தனர்!!

இந்த நாட்டு மக்களின் தேவைக்கு ஏற்ற அளவு ஆடை கதர்த் திட்டத்தினால் கிடைக்காதுஎன்பதுமட்டுமல்ல, கிடைக்கக்கூடிய அளவும், எந்தரகமாக இருக்கும்! 14ம் நம்பர் நூல்!! அதிலும், கதர், நூற்பிலே கைதேர்ந்தவர்கள், 14ம் நம்பர் நூல் தயாரிக்கமுடியும்—வீட்டுக்கொரு ராட்டை வைத்துவிட்டால், 14ம் நம்பருடன் நின்றுவிடாதுநூல், பத்துமாகும்எட்டுமாகும்—இதிலே ஆடை நெய்தாகவேண்டும்—அதுதான்நமக்கு ஆடை—இந்த ஆடையுடன் ஆமதாபாத் போட்டிக்கு வரும்—வந்தால், கதர், கதறியாகவேண்டும், வேறு வழியில்லை. ஆமதாபாத்தின் 60—60 ஒருகடையில், பக்கத்துக்கடையிலே, ஆலையூரார் உபதேசப்படி நமது நாட்டவர் தயாரிக்கும் 14ம் நம்பர் நூல் வேஷ்டி! இரண்டில் எது செலவாகும்—எது உறுதிப்பாடு—வேலைப்பாடு உடையது—ஆழ்ந்த காங்கிரஸ் பற்றுள்ள தோழர்களைக்கேட்கிறேன், சிந்தித்துப் பார்க்கும்படி.

இங்கு செலவாவது மட்டுமல்ல, இப்போது நெசவாகும் துணிகள், வெளிநாடுகளுக்கு ஏராளமாகச்செல்கின்றன. சீமையிலிருந்து நமக்கு முன்பு துணி வந்தது—தடுத்தாகிவிட்டது — ஜப்பான் சரக்கு வந்தது, தடுத்தது மட்டுமல்ல, இன்றைய நிலையில் அங்கு தொழில் நொருங்கிவிட்டது—இப்போது நிலைமை, அடியோடுமாறி இருக்கிறது. பண்டிதஜவஹர்லால் சொன்னதுபோல, இப்போதுஉலகில் நாலு பெரியநாடுகளில் இந்தியாஒன்று என்று மதிப்பிடமுடியும். அந்த "உயர்வு" கிடைத்திருக்கிறது. ரஷியா, அமெரிக்கா, சீனா, இந்தியா என்று அவர் குறிப்பிட்டது பொருத்தமான பேச்சு, ஏனெனில், சீமைத் துணியை நம்பியிருந்த நாடு, இன்று,

| | கெஜம் |
|---|---|
| மால்ட்டா | 295,930 |
| சைப்ரஸ் | 1361,600 |
| பலஸ்தீன் | ,, |
| ஏடன் | 2801,949 |
| பாரீன்தீவு | 3297916 |
| சிலோன் | 26915688 |
| பர்மா | 94006946 |
| மலாய் | 24377,317 |
| ஹாங்காங் | 3775625 |
| காம்பியா | 515567 |
| சியிராலியோன் | 144862 |
| கோல்ட்கோஸ்ட் | 855,124 |
| நைஜீரியா | 12,602,61 |
| தென்ஆப்பிரிக்கா | 298,781 |
| ரொடீஷியா | 111,775 |
| ஜான்சிபார் | 471,567 |
| கெனியா | 2514,361 |
| டாங்கனியிகா | 5092,542 |
| சூடான் | 1965730 |
| மொரீஷஸ் | 4473534 |
| கனடா | 204609 |
| பிரிட்டிஷ்கினி | 168120 |
| ஆஸ்ட்ரேலியா | 698,177 |
| பிரான்ஸ் | 12500 |
| இராக் | 4696740 |
| ஈரான் | 6854011 |
| சுமத்ரா | 295,220 |
| ஜாவா | 1486,037 |
| போர்னியோ | 202488 |
| தாய்லந்து | 854,750 |
| இந்தோசீனா | 32640 |
| சீனா | 32248 |
| ஈஜிப்ட் | 23,467,395 |
| மொராக்கோ | 342,525 |
| கௌதமேலா | 628,800 |

போன்ற பல்வேறு நாடுகளுக்குத் துணி அனுப்பும் நிலை பெற்றிருக்கிறது—1937—38ம் ஆண்டுக்கணக்குப்படி. இந்தஇடங்களிலேயும், இன்னும் பல்வேறு இடங்களிலேயும், இந்தியா, வியாபாரம்செய்வதற்கானவசதிகளைச் சர்க்கார் செய்துள்ளனர். உலகிலே, பருத்தி உற்பத்தியில், உயர் ஸ்தானம் வகித்துள்ள நாடுகளில் இந்தியா ஒன்று— எனவே நெசவுத் தொழிலில் தலை சிறந்து விளங்கி, வெளிநாடுகளுக்கு, ஆடை அனுப்பும் வசதி இருக்கிறது—ஆனால், இந்த நாடுகள் 14ம் நம்பர் கதர்நூல் ஆடையல்ல விரும்புவது! சென்னை கதர்த்திட்டத்தோடு நின்றுவிட்டால். இந்த நாடுகளில் வடநாட்டு ஜவுளிதான் செல்லும், வியாபாரத்துறை வடநாட்டுக்குத்தான் இருக்கும்.

சென்னையின், பூகோள அமைப்பைக்கவனிப்பவர்கள், தென்கிழக்கு ஆசியாப்பகுதியிலுள்ள நாடுகளுடன் தொடர்புகொள்வதற்குச்சென்னையே சிலாக்கியமான இட அமைப்புப்பெற்றிருப்பதை அறியலாம் — ஆனால், சென்னை, வீட்டுக்கொருராட்டையை வைத்துக்கொண்டிருக்கவேண்டுமாம்!! எவ்வளவு கடின சித்தமிருக்கவேண்டும் இந்தத்திட்டத்தை நமக்குச் சமைத்த!!

உள்நாட்டுத்தேவைக்குப்போதாது வெளிநாட்டு வியாபாரம்இராது—பம்பாய்ச்சரக்குக்குக் காத்திருக்கவேண்டும்—மூட்டுரகம்மட்டுமே நெய்யமுடியும்—என்பதோடு முடியவில்லை தொல்லையின் எண்ணிக்கை.

20ம் நம்பர் மில்நூலைக்கொண்டு மில்லில் தயாரிக்கப்படும் ஆடை, கெஜம் ஒன்று $5\frac{1}{2}$ அணுவுக்குக் கிடைக்குமானால், அதே மில் நூலைக்கொண்டு கைத்தறியில் தயாரிக்கும் ஆடை $9\frac{1}{2}$ அணுவாகுமாம், அதே20ம் நம்பர் நூலையே, கையினாலேயே நூற்றுக் கையினாலேயே நெய்து கதராக்கினால் கெஜம் 1—6—0 ஆகிறதாம்—இது நிபுணர்கள் கணக்கு—இன்று பிரகாசம்அவர்களை எதிர்க்கத்தயாரித்ததல்ல.

ஐந்தரை அணுவுக்குக் கிடைக்கக்கூடியதை ஒருரூபா ஆறணுவுக்கு வாங்கவேண்டும் — கதர் ஆடையின் பாரம் இது, விலையைப்பொறுத்தமட்டில்! ஏன், பொதுமக்கள் இந்த வீண்பளுவைச் சுமக்கவேண்டும்? எப்படிச் சுமக்கமுடியும்? எவ்வளவு காலத்துக்குச்சுமக்கச்சம்மதிப்பர்? என்பன போன்றவைகள், சிந்தனைக்குரியவிஷயங்கள்.

இவ்வளவோடுமுடிகிறதா? இல்லை! மில்லில் நூற்றநூலைக்கொண்டு ஒரு பவுண்டு நூலில் எத்தனை கெஜம் ஆடை தயாரிக்க முடிகிறதோ, அதிலேபாதி அளவுக்குத்தான் கதர் நூலைக்கொண்டு கதராடை தயாரிக்க முடியும்— அதாவது பஞ்சும் வீணாக்கப்படுகிறது.

அதுமட்டுமல்ல! எட்டுமணிநேரம் கைராட்டையில் நூற்றால், 20-ம் நம்பர் நூல் $2\frac{1}{2}$ சிட்டம் வருகிறது என்றால், அதே 20-ம் நம்பர் நூலை, மில்லில், அதே 8-மணிநேரத்தில் 345 சிட்டம் அளவு தயாரிக்கமுடியும்! ஆக, பணக்கேடு, பஞ்சுக்கேடு மட்டுமல்ல, நேரக்கேடும் இருக்கிறது—நூற்பதில் இருப்பதுபோலவேநெய்வதிலும் நேரக்கேடு நேரிடுகிறது. அதுமட்டுமல்ல, பல காலமாக வளர்த்துவந்த தொழில்திறம், நசித்துவிடும்கேடு வேறு இருக்கிறது.

மில்லிலேகூடத் தயாரிக்கமுடியாத வகையான, மேன்மையான முறையுள்ள, அழகியபார்டரும், உள்கோடு, கொட்டடிகளும் உள்ள, மிக உயர்ந்தரகத் துணிகளை, நமது மாகாணக் கைத்தறிக்காரர்கள் தயாரிப்பதில் கீர்த்திவாய்ந்தவர்கள். சேலம், மதுரை சரிகைத் துப்பட்டாக்களை, மில்லில் தயாரிக்க முடியாது! இந்த ரகங்களை நெய்யும் கைத்தறிக்காரர்களின், திறமை நசித்துப் போவதுடன் வாழ்க்கைத்தரமும் பாழ்படும்.

இவ்வளவு நஷ்டங்கள் உள்ளன, பிரதமமந்திரி கொண்டுவரும் திட்டம் பிடிவாதமாக அமுலுக்குக்கொண்டு வரப்பட்டால்.

எனவேதான், பல்வேறு கட்சியினரும், பொருளாதார நிபுணர்களும், இந்தத் திட்டம் கூடாது என்று கூறுகின்றனர். மூத்து உதிர்ந்திடுவது போல, மூதியவர் மந்திரிபாஷ்யம் கூறுகிறர், "இதெல்லாம் முதலாளிகள்கிளப்பிவிடும் எதிர்ப்பு" என்று. இந்தப் பழிசுமத்தி பிழையைமறைக்கப்பார்ப்பது நடக்கிற காரியமல்ல. முதலாளிகளின் பிடியிலே இருக்கும் ஆலைகளையும், இனித்துவக்க வேண்டிய புதிய ஆலைகளையும் சர்க்காரே ஏற்று நடத்தவேண்டும் என்று கூறுகிறோம். கதருக்காகச் செலவிடும் மூன்று கோடி ரூபாயில், புதுமில் துவக்கலாம் சர்க்கார்—மூடிக்கிடக்கும் சூளைமில்லை ஏற்று நடத்தலாம்—மில்கள்வேண்டும் என்று கூறினால், மில்கள் முதலாளிகளிடம் இருக்க வேண்டும் என்று கூறுவதாக, சாதாரணமந்திரி அல்ல, சட்டமந்திரி, தவறான அர்த்தம் செய்து கொள்வது அழகா! டாக்டர் C. R. ரெட்டியும் T. R. வெங்கடராம சாஸ்திரியாரும், சுதேசமித்திரனும், இந்துவும், தினசரியம் பிறவும் முதலாளிகளின்விசைக்கு ஆடும் கருவிகளா? நாமறிபோம்! ஆனால் ஒன்று நாம் படித்திருக்கிறோம், மறக்கவில்லை,

1946, மார்ச்சு மாதம், ஆமதாபாத் நெசவாலை முதலாளிகள் 500,001 ரூபாய்கொண்ட பணமுடிப்பைச்சர்தார் படேலுக்குத் தந்தனர், நாட்டுக்கு அவர் ஆற்றிய தொண்டுக்கு மெச்சி அந்தசெக் தருவதாக, முதலாளிகள் சங்கத்தலைவர் சேட்சாகர்லால் பாலாபாய் பேசினார். பொதுமக்களின் பொருளாதாரநிலை பாதிக்கப்படுகிறதே, என்ற கவலைகொண்டு, மில்ஒழிப்புத் திட்டத்தைக் கண்டிக்கிறோம்—இதற்குத்தக்க சமாதானம் கூற முடியாதநிலையிலே, இது முதலாளிகள் கிளப்பிவிடும் எதிர்ப்பு என்று பச்சைப்புளுகு பேசுவதன்றி வேறுவழியில்லை. ஆனால், திட்டமாகவும் தெளிவாகவும் கூறுகிறோம், முதலாளித்வத்தை ஒழிக்கவழி இருக்கிறது—மில்களைச் சர்க்கார் நடத்துவதே தக்கவழி, அதற்கானதைரியத்தை மந்திரிசபை பெற்றால் நாம் மிகமகிழ்ச்சி பெறுவோம். முதலாளித்வம் ஒழிக்கப்படவேண்டும்—மில்அல்ல! கள்ளுக்கடை ஒழிக்கப் படவேண்டும்—தென்னைமரமல்ல!

**ஒற்றுமையே உயர் கானம்**

## பம்பாய்

7-ம் பக்கத் தொடர்ச்சி

முறையா? என்று நாம்கேட்கிறோம் — நாடுகேட்கிறது — காங்கிரஸ் ஏடுகள்கேட்கின்றன. இவைகூட அல்ல முக்யம், முதலமைச்சரின் குமாரர் கூடக் கேட்கத்தான் செய்வார். இங்கு தந்தையார், விட்டுக்கோர் ராட்டை இருக்கட்டும் என்கிறார்; அதற்காகப் பொதுமக்களின் பணத்தை அள்ளிவீசுகிறார் கதருக்கு, மில்வேண்டாம் என்கிறார், இதே நேரத்தில், முதல்மைச்சரின் குமாரர் சீமைக்குப் பிரயாணமாகிறார் நெசவு ஆலைத்தொழில் சம்பந்தமாக மேல்படிப்புப்பெற! தந்தையின் திட்டத்தை மகனார் எப்படி நிறைவேற்றி வைக்கிறார் பாருங்கள்!

இந்த நாட்டுமக்களை என்னென்பது! ஒருபுறம் தந்தை ஆலை ஒழிப்புத்திட்டமிடுவதைக் காண்கின்றனர், மற்றோர் புறம் அதே சமயத்தில் அவருடைய மகன், நெசவாலைத் தொழில்சம்பந்தமான உயர்தரப் படிப்புப் பெற மேனாடு போகிறார் என்பதைப் பார்க்கின்றனர், இதென்ன விசித்திரம் என்று யோசிக்கவும் முன்வரவில்லை!!

நாம் கூறும்போதோ "எதிர்க்கட்சிக்காரர்" முறை கூறுகிறார் என்று எண்ணி விடுகிறார்கள். தாமாகவோ சிந்திக்க மறுக்கிறார்கள். இந்த நிலையிலேதான், தினசரி—தினமணி — போன்ற இதழ்கள் இந்தப் பிரச்னை பற்றித் தைரியமாக விளக்கம் எழுதத் தொடங்கினது காண, நாம் மிகமகிழ்ந்தோம் — குறிப்பாகத் தினசரியின் தைரியத்தைப் பாராட்டுகிறோம்.

சம்பிரதாயப் பேச்சுக்காக வேண்டுமானால் கூறலாம், தினசரியின் விளக்கத்திலோ வாதத்திலோ, எதிர்த்து எழுதுவதிலோ, என்ன பிரமாதம் இருக்கிறது; இந்தக்காரணங்களை எல்லாம் நாம், அலசி அலசிக் காட்டி இருக்கிறோம் முன்பு, இப்போது தானே, இந்த ஏடு எழுதுகிறது என்று கூறியும்விடலாம். ஆனால், எந்தக்காங்கிரஸ் கட்சியைத்தினசரி ஆதரிக்கிறதோ, அந்தக்கட்சியின் முக்யஸ்தர்மட்டுமல்ல, மூலவர் காந்தியார், அவருடையதிட்டம் கதர், அவர்மீதும் அந்தத் திட்டத்தின்மீதும் பாரத்தைப் போட்டுவிட்டுத்தான் முதலமைச்சர் பிரகாசம் மில்ஒழிப்பு வேலையில் முனைகிறார், 'கல்கி' கூறுவதுபோல, இந்தப்பிரச்னை, காங்கிரசாருக்குத் தர்மசங்கடமான நிலையை உண்டாக்கிவிட்டது. பிரகாசம் திட்டத்தைக் கண்டித்தால், அது காந்தியாரின் திட்டத்தைக் கண்டிப்பதாகத்தான் முடியும்; எனவே, அச்சம் ஏற்படுவதும் கட்சியில் பிளவும், கட்டுப்பாட்டிலே ஒடிசலும் ஏற்பட்டால் என்ன செய்வது என்ற பயமும், எதிர்க்கட்சி பயன்படுத்துமே என்ற எண்ணமும் தோன்றி, உறுதியைக் குலைத்துவிடவும் கூடும்; இருப்பினும் இவ்வளவு அச்சத்தையும் துச்சமாகக்கருதி, 'தினசரி' இந்தத் திட்டத்தைக் கண்டித்திருக்கிறது கண்டு, நாம் அதன் தைரியத்தைப் பாராட்டாமலிருக்க முடியாது. ஒருகட்சியை ஆதரிக்கும் ஏடு, அந்தக் கட்சியின முக்கியமானதிட்டம், நாட்டுக்கும் மக்களுக்கும் சரியல்ல என்று தோன்றும்போது, எதிர்த்து எழுதுவது, கட்சிக்கட்டுப்பாட்டில் சிக்கிய நிலையில் சுலபமான காரியமல்ல. இந்தத் தைரியம், வேறு பலஏடுகளுக்கு உண்டு என்றோ, ஏற்படக்கூடுமென்றோ, சொல்லவும் முடியாது.

அக்டோபர் 21ந்தேதிதினசரி "ஜம்பம் வேண்டாம்" என்ற தலைப்பிலே எழுதுகையில்,

"புதிய மில்களை ஏற்படுத்தும் வேலையைத்தொடர்ந்து நடத்திக்கொண்டு போவதுதான் விவேகமானது என்பதை புத்தியுள்ளவர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள். புது மில்கள் ஏற்பட்டு வேலை செய்ய ஆரம்பிக்கும் போது கதர் திட்டம் வெற்றி பெற்றுவிட்டால் புது மில் சரக்குகளை ஏற்றுமதிசெய்து விடலாம்; கதர் திட்டம் தோற்றுப் போய்விட்டால் புது மில் சரக்குகளை ஜனங்கள் உபயோகித்துக் கொள்ளலாம். இந்த மாகாணத்தில் 24 புது மில்கள் ஏற்படுத்த அனுமதி கொடுத்திருக்கிறார்கள். மில்களை ஆரம்பிக்கும்வேலையில் இதுவரையில் அவர்கள் ஒரு கோடி ரூபாயாவது செலவிட்டிருப்பார்கள். இந்த ஒரு கோடி ரூபாயையும் எதற்காகவீணாய்போகும்படிவிட வேண்டும்? இவற்றையெல்லாம் மந்திரிகள் நிதானமாய் யோசித்துப் பார்த்து சேற்றில் வைத்த காலை வெற்றி கரமாக வாபஸ் வாங்குவார்களாக" என்று குறிப்பிட்டிருக்கிறது.

பிரதமர் பிரகாசத்தின் பிடிவாதம் என்ற காரிருளை நீக்கிக்கொண்டு, தினசரியின் மின்வெட்டுகள் கிளம்புகின்றன— மகிழ்கிறோம்—ஆனால் இது மட்டும்போதாது. கட்சிகளைக்கொஞ்சம் மறந்து, நாட்டுத் தொழிலின் நிலைமை, அதைநம்பிக்கிடக்கும் இலட்சக்கணக்கான மக்களின் நிலைமை, பொருளாதார நிலைமை ஆகியவற்றைக் கவனித்து, இந்தப் பிரச்னையைப் பொதுப் பிரச்னையாக்கி, இந்த ஆபத்தான திட்டத்தைக் கைவிட்டுவிடும்படி, முதலமைச்சரை வற்புறுத்தியாக வேண்டும் — இதனை, ஓட்டளித்து யாரார்சட்டசபைக்கு அனுப்பி வைத்தார்களோ, அவர்களிடம் அந்தந்த ஊரிலே, பொதுக்கூட்டம் நடத்தி — எல்லாக்கட்சியிலும் இதுபற்றி ஒருமித்த கருத்துடையோர் கூடிய பொதுக் கூட்டம் நடத்தி, மில் ஒழிப்பு கூடாது என்பதைச் சட்டசபையில் தத்தமது தொகுதியின்சார்பிலே எடுத்துரைக்கும்படி கூற வேண்டும். அந்தஅவசியம் இருக்கிறது என்பதுமட்டுமல்ல, மக்களுக்கு அந்த உரிமைஇருக்கிறது —இப்படி மில்களை மூடுவோம் என்று, தேர்தல்காலத்திலேகாங்கிரசார் கூறினதில்லை என்பதையும்பொதுமக்கள்கவனத்துக்குக் கொண்டு வருகிறோம். மக்கள் துளியும் எதிர்பாராதது இந்தத் திட்டம். இந்தத்திடீர்த் தாக்குதலுக்குக் காரணமும் இல்லை— நாடு இதனைத்தாங்கவும் முடியாது—1க்கு 11, என்ற முறையிலே பம்பாய்வளர்ந்திருப்பதையும், பொதுவாகவே வடநாடு, சகலவிதமானதொழிலிலும்ஓங்கி வளர்ந்தபடி இருப்பதையும், இங்கு இயற்கை, செல்வத்தைக் கொடுத்தும், தரித்திரநாடாகவே நிலைமை இருப்பதையும், பொது மக்கள் மறந்துவிடக்கூடாது

நெசவாலைத்தொழிலைவளர்க்க இதுவரை, எடுத்துக்கொண்ட முயற்சியும், செலவிடப்பட்ட பணமும், பொறுக்கப்பட்ட கஷ்டநஷ்டமும்அளவிடக்கூடியதல்ல. உண்மையிலேயே கதர் மட்டுந்தான்வளர்ந்திருக்கவேண்டும் என்று விரும்பியிருந்தால், 417 ஆலைகள் தோன்றுகிறவரையில் சும்மா இருந்திருக்கலாமா? அந்த ஆலை அரசர்களின் நேசத்தையும் பாசத்தையும் வளர்த்திருக்கலாமா? அவர்களைக்கொண்டு தேசியக் காரியங்களைச் சாதித்துக்கொள்வதாகப்பேசி இருக்கலாமா? நெசவாலைத் தொழில் ஓங்கிவளர்ந்தானபிறகு, மேனாட்டுடன் போட்டியிடக்கூடியஉன்னதமான அளவுக்கு முன்னேறியானபிறகு, கோடிக்கணக்கான பணம் முதலாகக்கொட்டியான பிறகு, புதிய புதிய யந்திரங்களை அமைத்தான பிறகு, மில்ஒழிப்பு வேலையைத் துவக்குவது என்றால் அதிலே பொருத்தமிருக்கிறதா? முடியுமா? அவசியமா?

1945 ஆண்டு, ஆகஸ்ட்டு மாதக்கணக்குப்படி

மில்கள்—417

மூலதனம்—சுமார் 54½கோடி

கதிர்கள்:— ஒரு கோடிக்கு மேல் உள்ளன. ஆண்டொன்றுக்கு, 24 இலட்சம் கண்டி பருத்திசெலவாகிறதுமில்களில். (கண்டி ஒன்றுக்கு 784 பவுண்டு பருத்தி.)

இவ்வளவு பெரியமுறையிலே, வளர்ந்துவிட்ட தொழிலை, கதர்த் திட்டத்துக்காக, பலியிடுவதா! தேவையா? முடியுமா?

தேவை—முடியும் — என்றே வைத்துக்கொண்டாலும், இதனை இந்தியா பூராவுக்கும் திட்டமாக்கொள்ளாமல் சென்னையில் மட்டும் நடத்த முயல்வானேன்? வடநாடு இந்தத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளுமா? வடநாடுஎன்று பொதுவாகக்கூறினாலும்பொருந்தாது—காங்கிரசை ஆதரிக்கும் மாகாணங்களிலே மட்டுமே இதைப்பற்றிப்பேசவாவது முடியும்—வங்கம்—சிந்து—பஞ்சாப் எல்லை—அசாம் போன்ற இடங்களிலும் வடக்கே உள்ள சுதேச சமஸ்தானங்களிலும் இதுபற்றிப் பேசவேமுடியாது — அங்கெல்லாம், காந்தீயக் கதர்த்திட்டத்தைப் புகழக்கூட மாட்டார்கள். காங்கிரஸ் மாகாணங்களிலேமட்டுமே, காந்தியாருடையதாட்சணியத்துக்காக, பேசலாம் இதுபற்றி—அப்படியும் செய்யவில்லை — பம்பாய், ஐக்கியமாகாணம், ஒரிசா, மத்ய மாகாணம், ஆகிய இடங்களிலுள்ள முதலமைச்சர்களை அழைத்து, அவர்களையும், மில் ஒழிப்புக்கு ஒப்புக்கொள்ளச் செய்யும்படி செய்திருந்தால், ஏதோ வருகிற கஷ்டம் எல்லோருக்குந்தான், நமக்குமட்டுமல்ல, என்ற அளவாவது ஆறுதல் இருக்கும், இங்குள்ள காங்கிரஸ் நண்பர்களுக்கு. இப்போது அதுவும் இல்லையே!


அங்கே எல்லாம்புதியமில்களை அமைக்கிறார்கள்—புதிய மெஷின்கள் 100கோடிரூபாய் செலவில் தருவிக்கத்திட்டமிடுகிறார்கள்— நிபுணர்கள்மேனாடுகளில் புகுந்து விஞ்ஞான வசதிகளைத் தேடுகிறார்கள்—வெளிநாடுகளிலே வியாபாரத்தொடர்புகளை ஏற்படுத்துகிறார்கள்—இவற்றை எல்லாம் காணும் சென்னைக்கு, பம்பாயின் மில் துணி உற்பத்தியிலே பத்தில் ஒரு பாகம்மட்டுமே உற்பத்தி செய்யும் சென்னைக்கு, மில் ஒழிப்புத்திட்டமா? எந்த வகையான நியாயம் இது?

எதிர்கால இந்தியாவின் திட்டம், A. B. C. என்ற மூன்று தொகுதி வட்டமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. இதிலே நாம் பம்பாயுடன் சேர்க்கப்பட்டிருக்கிறோம். பம்பாய் ஏற்கனவே, மில் துணி உற்பத்தியில், 10-மடங்கு அதிகமாக வளர்ந்திருக்கிறது—அந்தத் தொகுதியில் உள்ளமற்ற மாகாணங்களும் வளர்ந்துள்ளன—மேலும் வளர வழிவகுத்துக்கொண்டன. அதே தொகுதியிலே இணைக்கப்பட்டுள்ள சென்னையில் மில் கூடாது என்றால் விளைவு என்ன ஆகும்?

இப்போது ஒருமுறைமீண்டும் அந்தப்பணகுண்டு வீசும் உருவைப்பாருங்கள்! அந்தப்பம்பாயுடன்சென்னை இணைக்கப்பட்டால் என்னகதியாகும், இந்நாட்டுப் பொருளாதார வாழ்வு! அங்கு மில்கள் வளர்ந்துவிட்டன—வளருகின்றன—மில்கள் மட்டுமல்ல— தொழிலில் சகலத்திலும், ஒன்றுக்கு பத்து இருபது என்ற அளவில் வளர்ந்துவிட்டிருக்கிறது பம்பாய்—அந்த மாகாணத்துடன் இணைக்கப்பட்டுக்கிடக்க வேண்டுமாம் சென்னை! என்ன விளைவு காண்போம்? நினைத்தாலே நடுக்கம் பிறக்கும்! சமனை

(5-ம் பக்கம் பார்க்க)

மன அமைதியே மெய்ஞ்ஞானம்




## பம்பாய்

2-பக்கத் தொடர்ச்சி

சம் கதிர்கள் உள்ளன: படத்தில் 60 பசுக்கள் காட்டப்பட்டுள்ளன. ஒரு பசு, 1-இலட்சம் கதிர்களுக்குச்சின்னமாகக்காட்டப்பட்டிருக்கிறது. பதினொரு யானைகளைக் காணலாம்; இப்படத்தில் — 30-கோடி சதுரகெஜம் துணி ஒருயானையாக உருவகப்படுத்தப் பட்டிருக்கிறது. ஒருபெரிய குதிரை, கொஞ்சம் மட்டமானகுதிரை, பொறிக்கப்பட்டிருக்கிறதல்லவா, 10-கோடி சதுரகெஜம், கைநெசவுத்துணியைக் குறிக்கிறது பெரிய குதிரை. மட்டகுதிரை 8-கோடி சதுரகெஜம்கைநெசவுத்துணியைக் குறிக்கிறது.

இதே முறையில் சென்னையின் நிலைமையை2-ம்பக்கம்உள்ள சித்திரத்தின் துணைகொண்டு காணுங்கள்.

இதிலே 8-பெரியவர்களும் 1-இளைஞரும் உள்ளனர்! 8½கோடி ஜனத்தொகை,சென்னை,கொச்சி திருவாங்கூர், மைசூர் உள்ளிட்ட பிரதேசத்தில்என்பதைக் குறிக்கிறது.

இந்த8½கோடிமக்கள்வாழும் வட்டாரததில், 20-இலட்சம் கதிர்கள்தான் உள்ளன;இதைக் காட்டத்தான் 20 பசுஉருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

3½—கோடி ஜனத்தொகையுள்ள பம்பாயில் 60 இலட்சம் கதிர். 8½ கோடியுள்ள சென்னை வட்டாரத்தில் 20 இலட்சம்! நியாயமா? பொருளாதாரம் சமஎடையாக இருக்கிறதா? யோசியுங்கள்.

அங்கு 11யானைகள்உள்ளன; இங்கு ஒருயானைதான்! அதாவது அங்கு 330-கோடி சதுரகஜம் மில்துணி; இங்கு 30 கோடிசதுரகெஜம் மில் துணி மட்டுந்தான். இங்கு குதிரைகள் மட்டும் 6-உள்ளன, அதாவது 60-கோடி சதுரகெஜம் கைநெசவுத்துணி தயாராகிறது. ஒருகுட்டிக் குதிரையும் இருக்கிறதல்லவா! அதுஒரு 6½ கோடி கைநெசவுத் துணி தயாராவதற்குக் குறி. ஆக மொத்தம 66½ கோடி சதுரகெஜம்.

இருவகைத் துணியும் சேர்ந்து 3½ கோடிமக்கள் உள்ள பம்பாயில் 348-கோடிசதுரகெஜம், எட்டரை கோடிஜனத்தொகை உள்ளசென்னையில் 96½ கோடி சதுரகெஜம்.

இந்தநிலையிலே, இங்கு மில் கூடாது என்று துணிந்து கூறுகிறார் முதலமைச்சர்.

சென்னை மாகாண நெசவுத் தொழிலின் நிலைமையை வளரச் செய் வதற்காக, மத்ய சர்க்கார், சன்ன நூல் நூற்க 152000 கதிர்களும், முரட்டு நூல்நூற்க இரண்டு இலட்சம் கதிர்களும் தருவதாக வாக்களித்தது; சென்னைக்கு இவை வேண்டாம் என்று பிரகாசம் காரு கூறுகிறார் — கதிர்களும் அதிகரிக்கக் கூடாது, புதிய மில்லும் கிடையாது உள்ளதையும் மூடிவிடப்போகிறேன் சமயமறிந்து என்கிறார். முறையா?

6-பக்கம் பார்க்கவும்

## பாகப் பிரிவினை

2-ம் பக்கத் தொடர்ச்சி

களை பின்னர், சைவத்தையும் அதன் ஆசிரியர்களையும் கண்டவுடனே திகில் அடைந்தார்கள் என்பதாகப் பறைசாற்றப்படுவதும் பகுத்தறிவுடையோர் செயலாகாது. ஒருசமயத்தைப் பின்பற்றி ஒழுகுபவர்கள், இன்னொருசமயத்தைக் குறைகூற முற்படும்போது, வேறொரு சமயத்தவர், தம்மையும் தம்சமயத்தையும் குறைகூறுவரே என்று வது எண்ணிப்பார்க்கமாட்டார்களா?

இனிச், "சைவசமயம் எந்த விதமான குற்றத்திற்கும் அகப்படாதது—அதனிடம் குறையே கிடையாது — குணக்குன்று— அருட்பிழம்பு — அன்பே சிவம்" என்று சொல்லப்படுவது உண்மையானால், எல்லா நலன்களும் ஒருங்கே அமையப் பெற்று — குறைவற்று —நிறைவுற்று விளங்கும் ஒருசமய (சைவ)த்தை இந்நாட்டிலுள்ளவர் பின்பற்றி வழி படாமல், அதற்குப்போட்டியாகப்பலசமயங்களையும், அச்சமயங்களுக்கு ஏற்றபல கடவுளரையும், அவர் தம்மை வழிபடும் பல்வேறு முறைகளையும் ஏன் உண்டாக்குதல் வேண்டும்? மற்ற மதங்களாவது, நம்போலும் மக்களால் உண்டாக்கப்பட்டவை. ஆனால், சைவம் அப்படிப்பட்டதல்லவே! முழுமுதற்பெரும் பொருள் என்று சொல்லப்படும் சிவனாலன்றோ சைவசமயம் உண்டாக்கப்பட்டதாகச் சைவசமய நூல்கள் எல்லாம் ஒரே முகமாய்க் கூறுகின்றன! எனவே, முற்றறிவும் முழுதுணரும் இயல்புமற்ற மககளாலன்றி, எல்லாம்வல்ல எம்பெருமானால், உலகம் தோன்றிய அன்றே உண்டாக்கப்பட்டதாகச்சொல்லப்படும் 'உண்மைச்' சைவம் இருக்க, அதனைப் பின்பற்றி ஒழுகாமல், மக்கள், தங்கள் 'அறியாமை'த்துணைக்கழைத்துக்கொண்டு, பல்வேறு சமயங்களையும், அவற்றிற்கேற்பப்பல் வேறு கடவுளரையும் ஏன்உண்டாக்குதல் வேண்டும்? குறை காண முடியாத ஒரு சமயத்தில்—குறை இல்லாத ஒருசமயத்தில், குறைகாணவும், கண்ட குறையை விளக்க அளவற்ற ஆதாரங்களும் எப்படிக்கிடைத்தன? குறை ஏதும் காணமுடியாத சைவசமயத்தில், குறை இருப்பதாக நிலை நாட்டியவர்கள், எத்தனையோ சமயங்களை இந்நாட்டில் நிலைபெறும்படிச் செய்துவிட்டனரே: வைணவம்—புத்தம்—சமணம் ஆகியபெரிய சமயங்களும் இன்னும் எத்தனையோ சீக்கியமதம் போன்ற சிறுசிறு சமயங்களும் சைவத்திற்குப் போட்டியாக உண்டாக்கப்பட்டவை என்பது எவராலும் மறக்கமுடியாத உண்மையாகும். இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், சைவத்திற்குள்ளேயே பல பிரிவுகள். பாசுபத சைவம், மாவிரத சைவம், காபால சைவம், வாம சைவம், வயிரவ சைவம், அவிக்கியவாத சைவம், பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சமவாத சைவம், சங்கிராந்தவாத சைவம், ஈசுரவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம், தருக்கசைவம், மீமாஞ்சசைவம், ஏகான்மவாத சைவம், சாங்கிய சைவம், யோக சைவம், பாஞ்சராத்திர சைவம் எனப்பலவகை உண்டு. ஒரு சைவத்தைப்பற்றி இன்னொரு சைவம் வெளியிட்ட கண்டனநூல்கள்கணக்கற்றன! கண்டன கண்டனங்கள்! மறுப்புக்கள்! வைரக்குப்பாயங்கள்! ஆப்புகள்! ஆணிகள்! கோடரிகள்! அளவிறந்தன!! ஒருவனுக்கிருந்தசொத்தை, அவனுக்குப் பிறந்த நாலு பிள்ளைகள், நாலு பாகமாகப் பிரித்துக் கொண்டு, ஒருபிள்ளை தனக்குக் கிடைத்த பங்கைக்கல்விக்கும், இன்னொரு பிள்ளை தன்னுடைய பங்கைக் கலவிக்கும், வேறொரு பிள்ளை வேறொன்றுக்குமாகச் செலவிடுதல்போல, முழுமுதற் பெரும் பொருளாம் சிவனுடையசொத்தான சைவத்தை அவருடைய பிள்ளைகளே பாகப் பிரிவினை செய்து கொண்டு, அதனைப் படாதபாடு படுத்தி விட்டனர்!

இதோடு நிற்கவில்லை. உலகத்தையும் அதிற்காணப்படும் அசை பொருள் அசையாப் பொருள் அனைத்தையும் உண்டாக்கியதாகச்சொல்லப்படும் சிவனுடைய பிள்ளைகளிற் சிலர், ஒரு தகப்பனுடைய சொத்தை—அது நல்ல வழியில்தேடப்படாததனன்றோ அல்லது வேறு காரணம்பற்றியோ அதிற் பங்குபெற விரும்பாமல், தங்களுக்கு வேண்டியதைத் தாங்களேதேடிக்கொள்ளலாம் என்று கருதி அவ்வாறு செய்வதுபோல், தங்களுடைய தந்தையாம் சிவனுடைய சொத்தான சைவத்தில் பங்குபெற விரும்பாமல், தங்களுக்குத் தேவையான சொத்தை (சமயத்தை)த் தாங்களே உண்டாக்கிக் கொண்டனர். வைணவர்—புத்தர்—சமணர் ஆகியோரும்இன்னும் சிலருமே தகப்பன் சொத்தில் பாகப்பிரிவினைகோராமல், தங்களுக்கெனத் தனியாகச்சொத்துச்சேர்த்துக் கொண்டவர்கள். இன்னும்சிவனுடைய புதல்வர்களிற் சிலர் இருக்கிறார்கள் — அவர்கள் கையாண்ட முறைதான் மிகவும் வேடிக்கையானது. அவர்கள், தங்களுடைய தகப்பனாரின் சொத்தை வேண்டாமென்று சொன்னதோடுமட்டும் நிற்கவில்லை; தங்கள் தகப்பன் வாழும் நாட்டிலுள்ள சொத்து எதுவுமே வேண்டாம் என்று கூறிவிட்டார்கள். யார் அவர்கள்? அவர்கள்தான், நம் நாட்டில் வாழும்—நம் உடன் தோன்றல்களான கிறித்தவரும், முசல்மான்களும், [illegible]. இவர்கள் எல்லாரும் ஒருகாலத்தில், சைவர்களாகவோ, வைணவர்களாகவோ புத்த—சமணர்களாகவோஇருந்தவர்கள். என்

(8-ம் பக்கம் பார்க்க)

# ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்
உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!
80, 100-நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

ராஜம் விலாஸ்,
சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் p.o. திருச்சி.


## பாகப் பிரிவினை

7-ம் பக்கத் தொடர்ச்சி

னாலும், இன்று இவர்கள், தங்களுக்கெனத் தனியாகச் சொத்துகள் தேடிக்கொண்டு, யாதொரு குறையுமின்றி வாழ்கின்றார்கள். தங்கள் தகப்பனையும் அவருடைய சொத்தையும் வேண்டாமென்று சொன்னதால் இவர்களுக்குஏற்பட்ட குறை ஒன்றுமே இல்லை. குறையில்லாதது மட்டுமன்று. தங்களுக்குக் கிடைத்த சொத்தைத்தங்கள் முன்னோர் (மாஜி) உடன்தோன்றல்களுக்கும்தாராளமாக வழங்கி வருகின்றனர். அவர்களும் அதை மறுக்காமல் ஏற்று, அச்சொத்தினால் பெறக்கூடிய நலன்கள் அனைத்தையும் இனிதே நுகர்ந்தும் வருகின்றனர். இதனை, இவர்களுடைய முன்னோர் தந்தையாம் சிவனோ அல்லது அவருடைய வார்சுகளோ தடுக்கவில்லை-தடுக்கமுடியவும் இல்லை.

அன்று, சைவசமயத்தைவிட்டுச் சமண சமயத்தைச் சேர்ந்த பாண்டியனை மீண்டுஞ் சைவத்தில் சேர்ப்பதற்காகச், சிவன், சீர்காழிச்சம்பந்தரைமதுரைக்கு அனுப்பியதுபோல், இன்று, சைவசமயத்தைவிட்டுக், கிறித்து மதத்திலும் முகம்மதிய மதத்திலும் சேர்பவர்களைத் தடுக்கக்கூடியவர்களைத் தயார் செய்து அனுப்ப அந்த எல்லாம்வல்ல சிவனால் முடியவில்லை. அன்று, சைவத்தில் இருந்தவர்களைச் சமணத்தில் சேர்த்த குற்றத்திற்காக ஆயிரக்கணக்கான சமணர்களைக் கழுவில் ஏற்றும் "காருணிய செயலைப்" புரிந்த சம்பந்தர் போன்றோர் எவருமின்று வரவுங்காணோம்! காலமாறுதல் கடவுளருக்குங்கூடக் கலக்கத்தை உண்டாக்கிவிட்டதுபோலும்!

இதனால் பெறப்படும்உண்மை என்ன? சைவ அன்பர்கள் கூறுவதுபோல், மற்றச் சமயங்களைவிடச் சைவத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு என்றோ, அல்லது எல்லாம்வல்லவரென்று செப்படிவித்தை செய்து காட்டப்படும் சிவனே அந்தச்சமயத்தை உண்டாக்கினார் என்றோ கொள்வதற்கில்லை என்பதும், உலகம் தோன்றிய பின்னர், முதலில் உண்டாக்கப்பட்டதாகச்சொல்லப்படும் இந்தச் சைவ சமயம் இயற்கைக்கும் அறிவிற்கும்பொருந்தஉண்டாக்கப்படாத காரணத்தாலேயே, அதற்குப் போட்டியாகப்பலமதங்கள்உண்டாக்கப்பட்டனவென்றஉண்மையுமாகும். அதுவுமன்றி,இன்று நம்மவர்களால் பின்பற்றப்பட்டு வரும் சைவ—வைணவ சமயங்களைப்பார்க்கிலும், புத்த–சமண சமயங்கள் மக்களின் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்யக்கூடிய முறையில் அமைந்துள்ளனவென்பது, அச்சமயாசிரியர்கள்எழுதிய நூல்களால் நன்கு அறியக்கிடக்கின்றது. ஒருசைவ நூலை எடுத்துக் கொண்டால், அதனை ஒரு சைவனேயன்றிப், பிறசமயத்தவர் எவரும் அதனைக்கையினால்கூடத் தீண்டமுடியாதபடி அந்நூலின் போக்கு அமைந்திருப்பதைப் பார்க்கலாம். அது போன்றதே வைணவ நூலும். ஆனால், புத்த–சமண நூல்கள், சாதி—மத வேறுபாடின்றி யாவராலும் வரவேற்றுப்படித்து அறிவு பெறக்கூடிய முறையில் அமைந்திருப்பதைக் காணலாம். இனிக், கிறித்தவ—முகம்மதிய மதநூல்கள் யாவராலும் வரவேற்கக்கூடிய முறையில் அமைந்திருக்கவில்லையென்றபோதிலும், அவை, மதத்துறையில் நல்ல–சிறந்தசீர்திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பது எவராலும் மறக்கமுடியாத உண்மையாகும். இதனாலேதான் அவ்விரு சமயங்களும் பல ஆயிரம் கல் தொலைவிலிருந்துவந்துஇங்கு பரவமுடிந்தது. இதுபோலவேதான், புத்த மதமும் இங்கிருந்து சைனா, ஜப்பான்,சயாம், பர்மா,இலங்கைமுதலானவெளிநாடுகளுக்குப் போக முடிந்தது. ஆனால்,உலகம் தோன்றிய காலத்தில் சிவனால் உண்டாக்கப்பட்டதாகச் சொல்லப்படும் சைவத்தாலும் அதன் உடன்தோன்றலான வைணவத்தாலும் இருந்த இடத்தைவிட்டு ஒரு அடிகூட அப்பால் எடுத்து வைக்க முடியவில்லை.

இனி, இச்சைவ — வைணவ சமயங்கள் இரண்டும் இவ்வுபகண்டம் முழுவதும் ஆங்காங்கு சிதறிப் பரவியிருந்தபோதிலும், வைணவத்தைப்பற்றி இந்நாவலந்தீவு மக்கள் அறிந்திருக்கும் அளவு சைவத்தைப்பற்றி அறியவில்லை என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும். அதிகம் தொலைவு செல்வானேன்; சென்னைக்கு அண்மையிலுள்ள நெல்லூருக்குப்போய், அங்குள்ள ஒரு சைவ அன்பரை நோக்கி, "உமக்குச் சைவசமய ஆசிரியரான சம்பந்தரைத் தெரியுமோ? அவரைப்பற்றிக் கேள்விப்பட்டதாகிலும் உண்டோ?" என்று கேட்டுப் பாருங்கள். "மாக்கு தெலியதே" என்ற விடையைத் தான் அவரிடமிருந்து பெற முடியும். ஆனால், வைணவ மதத்தைச் சேர்ந்த இராமனைப் பற்றி, ஏன்? அவருடைய தூதனான அனுமானைப்பற்றிக் கேட்டுப்பாருங்கள். "அனுமானா? அவர் எங்கள் கடவுளாயிற்றே! அவருக்கு நம்ம ஊரில் கோயில் கூட இருக்கிறதே" என்றுதான் சொல்லுவார்கள். இனி, முகம்மது நபியைப் பற்றியும், கிறித்துவைப் பற்றியும், புத்தரைப் பற்றியும் உலகத்தின் எந்தமூலையில் போய்க் கேட்டாலும், அவர்களைப்பற்றித் தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள். ஆனால், 'நம்ம' சைவசமயத்தைப்பற்றியோ அதன் ஆசிரியர்களைப் பற்றியோ வெளிநாடுகளில் உள்ளவர்களுக்குத் தெரியாதென்பது ஒருபுறம் இருக்கட்டும். இச்சைவசமயக் கடவுளும், இவ்வுலகத்தைத் தோற்றுவித்தவரும் என்று சொல்லப்படுபவரான "சிவன்" இருக்கிறாரே, அவருடைய பெயரையாவது, வெளிநாடுகளில்உள்ளவர்களில்பதினாயிரத்துக்கு ஒருவராவது அறிந்திருக்கிறார்களா என்பதனை அன்புகூர்ந்து கணக்கெடுத்துப் பார்க்கும் படிசைவமெய்யன்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். வெளிநாடுகளில் இருந்து இங்கு போந்தஆராய்ச்சியாளர்களான போப், கால்டுவெல், சர்ஜான் மார்ஷல், கவர், ராபின்சன் போன்ற சிலருக்குத்தான் இச்சைவசமயத்தைப்பற்றி ஓரளவு தெரியுமேயன்றி, ஏனையோர் நினைத்துணையும் அறியார்.

இந்த உண்மையை அடிப்படையாக வைத்துத்தான் போலும்,

"உலகெலாம் உணர்ந்
தோதற்கரியவன்"

என்றுசேக்கிழார்,தாம்பாடிய சைவசமயவிளம்பர நூலான பெரிய புராணத்தின் காப்புச் செய்யுளில் குறிப்பிட்டுள்ளார். உலகத்தவரால் உணர்ந்தறிய முடியாதவர் 'சிவன்'என்றுசேக்கிழார் எந்தப் பொருளை அடிப்படையாகவைத்துக்கூறினாரோ, அதற்கு நேர்மாறாக, இன்று, அவரை (சிவனை) ப்பற்றி அறிய வேண்டிய இன்றியமையாமை எதுவும் இல்லாத மக்களே உலகின் எப்பகுதியிலும் உள்ளனர் என்பது கண்கூடு. இப்படிப்பட்ட சிவனையும்–சைவத்தையும் நிலைநாட்டத்தான், சம்பந்தர் தோன்றி, ஞானப்பாலுண்டு, முத்துச்சிவிகை ஏறி மதுரைக்கு வந்தாராம்! அவரைக் கண்டவுடனேதான் சமணர் திகில் அடைந்தார்களாம் என்று சேக்கிழார் கூறியுள்ளார். எப்படிப்பட்ட "உண்மை" இது என்பதை எண்ணிப்பாருங்கள். மற்றவை அடுத்த கட்டுரையில்.

●


காஞ்சிபுரம் டி. மு. கோர்ட்டு
O. P. 73 of 1946,

மனுதார்கள்
1. E. S. வில்லியம்
2. எஸ்தர்புஷ்பம்
3. சுவர்ணம்ஜேசுதாஸன்

இறந்துபோன லாஸரஸ்அவர்களுக்குவரவேண்டியகடன்கள், மனுதார்கள் அடையும்படி வார்சுசர்டிபிகேட்பெறப்போட்டிருக்கும் மனு, விசாரணைக்கு 12—11—1946-ல் வாய்தா போடப்பட்டிருக்கிறது.


கே. வி. ஸ்ரீநிவாசாசாரியார்,
மனுதார்கள் வக்கீல்,
22—10—46.


## நன்கொடை

காரச்சியில் உள்ள தமிழ்நாட்டுப் போர்முனைத்தோழர்கள், தோழர் ஆதிமுருகேசன் அவர்கள் மூலம் "திராவிடநாடு" வளர்ச்சிக்காகஅனுப்பியரூபா 25, நன்றியறிதலுடன்பெற்றுக்கொண்டோம்,

முகவரி

ஏ. பி. ஜனார்த்தனம்
10. வெள்ளாளத்தெரு,
புரசைவாக்கம்
சென்னை.




Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram